சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

செய்திமடல் - 69 | 20-09-2012

13-09-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : இலங்கையில் இலவசக் கல்வி எதிர்நோக்கியிருக்கும் நெருக்கடிகள்.**

**தொடக்க உரையாடல் : பழ. றிச்சர்ட்**

இலங்கையை மாறிமாறி ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் நாட்டின் பொதுபணித்துறைகளை படிப்படியாக தனியார் மயமாக்கி அத்துறைகளில் அரசிற்கிருக்கும் பொறுப்புகளிலிருந்து விலகிக்கொள்வதோடு அத் துறைகளை சீரழிவுக்கு இட்டு செல்கின்றனர்.அதன் தொடர்ச்சியாகவே இலவச கல்வி தனியார்மயமாக்கப்படும் திட்டம் தற்போது நடைமுறை படுத்தப்படுகின்றது. ஆட்சியாளர்களின் தனியார் மயமாக்கல் கொள்கையும் நடவடிக்கைகளுமே இலவச கல்வி இன்று எதிர்நோக்கும் சவால்களிற்கும் அழிவிற்கும் காரணமாகும்.

ஆட்சியாளர்களின், கல்வியைத் தனியார் மயமாக்கும் நிகழ்ச்சி திட்டங்களின் இடையே தான் பல்கலைகழக விரிவுரையாளர்கள் ஆரம்பித்த சம்பள உயர்வு கோரிக்கை போராட்டம் இன்று இலவச கல்வியை பாதுகாக்கும் போராட்டமாக பரிணமித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் முன்வைத்திருக்கும் கோரிக்கைகளான,

1. கல்விக்கு தேசிய உற்பத்தி வருமானத்தில் 6% ஒதுக்கப்படல் வேண்டும்

2. பல்கலைகழகங்களில் அரசியல் தலையீடுகள் நிறுத்தப்பட்டு அவற்றின் சுயாதீன தன்மை பாதுகாக்கப்படல் வேண்டும்

3. தனியார் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படுதலும் கல்வி தனியார் மயப்படுத்தலும் நிறுத்தப்படல் வேண்டும்

4. கல்விக்கான தேசிய கொள்கைகள் வகுக்கப்படும் போது விரிவுரையாளர்களை இணைத்து கொள்ளல் வேண்டும்

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு வழங்கப்படல் வேண்டும்

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் புதிய மாணவர்களுக்கு கட்டாய இராணுவ பயிற்சி வழங்கப்படல் நிறுத்தப்படல் வேண்டும்

ஆகியவை இலவச கல்வியை பாதுகாப்பதற்கான போராட்டத்தின் பிரதான கோசங்களாக மாறியுள்ளன.

> தனியார்கள் கல்வியை வழங்குவதை அனுமதிப்பதால் கல்வி அனைவருக்கமான உரிமை என்ற நிலையிலிருந்து அது பணம் படைத்தவர்களுக்கான வரப்பிரசாதமாக மாறும். இந்த நிலையில் போட்டி மிக்க சூழலில் சாதரான குடும்பங்கைச் சேர்ந்த மாணவர்கள் முதல் சுற்றிலே தோல்வியடைந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்படும்.

சேவைகள் அனைத்தும் இலாபமீட்டும் விற்பனை பண்டமாக்கப்படும் முதலாளித்துவ பொருளாதார முறைக்குள் கல்வியையும் இலாபமீட்டும் வியாபார சேவையாக்கிடும் பகீரத பிரயத்தனத்தின் பிரதான பங்காளிகளாக, உலக ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களுக்காகவும் அவர்களின் சந்தை விரிவுபடுத்தலுக்காகவும் செயற்படும் உலக வங்கி , சர்வதேச நாணய நிதியம் ஆகிய ஏகாதிபத்தியவாதிகளின் முகவர்கள் காணப்படுகின்றனர்.

ஏகாதிபத்தியவாதிகளின் முகவர் அமைப்புகளின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப கல்விக் கொள்கை வகுக்கப்பட்டு தனியார் மயப்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்படுவதால் இலவசக் கல்வி நான்கு முக்கிய நிலைகளை எதிர்நோக்குகின்றது.

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

**புற்றுநோயும் அதற்கான சிகிச்சை முறைகளும்**

லோ. தசாந்தன் | 20-09-2012



பெரியார்

**பெரியார் எனப் பரவலாக அறியப்படும் ஈ. வெ. இராமசாமி** (E. V. Ramasamy, செப்டம்பர் 17, 1879 - டிசம்பர் 24, 1973) சமூக சீர்திருத்தத்திற்காகவும், சாதி வேற்றுமையினை அகற்றுவதற்காகவும், மூடநம்பிக்கைகளை மக்களிடமிருந்து களைவதற்காகவும், பெண் விடுதலைக்காகவும் போராடியவர். தமிழகத்தின் மிக முக்கியமான இயக்கமாகக் கருதப்படும் திராவிடர் கழகத்தினைத் தோற்றுவித்தவர்.

ஈ.வெ.ரா, தீவிர நாத்திகராக இருந்தார். இந்திய ஆரியர்களால், தென்னிந்தியாவின் பழம்பெருமை வாய்ந்த திராவிடர்கள் பார்ப்பனரால்லாதார் என்ற ஒரு காரணத்தினால் புறக்கணிக்கப்படுவதையும், அவர்களால் திராவிடர்களின் வாழ்வுச் சுரண்டப்படுவதையும் பெரியார் எதிர்த்தார். அவர் தமிழ்ச் சமூகத்திற்காகச் செய்த புரட்சிகரமான செயல்கள், மண்டிக்கிடந்த சாதிய வேறுபாடுகளைக் குறிப்பிடத்தக்க வகையில் அகற்றியது. தமிழ் எழுத்துகளின் சீரமைவுக்குப் பெரியார் குறிப்பிடத்தக்கப் பங்காற்றியுள்ளார். இவரின் சமுதாயப் பங்களிப்பைப் பாராட்டி யூனஸ்கோ நிறுவனம் "புத்துலக தொலைநோக்காளர்; தென்கிழக்காசியாவின் சாக்ரடிஸ்; சமூக சீர்திருத்த இயக்கத்தின் தந்தை; அறியாமை, மூடநம்பிக்கை, அர்த்தமற்ற சம்பிரதாயங்கள், மட்டமான பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் கடும் எதிரி" என்று பாராட்டுச் சான்றிதழ் வழங்கியுள்ளது

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772260165
0752151580

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## இலங்கையில் இலவச கல்வி எதிர்நோக்கியிருக்கும் நெருக்கடிகள்

முன்பக்கத் தொடர்ச்சி..

1)கல்வித் துறையில் தனக்கிருக்கும் பொறுப்புகளில் இருந்து அரசாங்கம் தன்னை விடுவித்துக்கொள்ளல்.

2)கல்வி விற்பனைப்பண்டமாக்கப்படல்.

3)கல்வி என்பது "உரிமை" என்ற நிலையில் இருந்து "வரபிரசாதமாக(privilege)" மாற்றப்படல்.

4)கல்வித் துறையின் மீது ஆசிரியர்கள்,மாணவர்கள், விரிவுரையாளர்கள் மத்தியில் அதிருப்பதி நிலை தோன்றல்

கல்விக்கு ஒதுக்கும் நிதியைக் குறைத்தல், கல்வி துறையில் தனியார்களை அனுமதித்தல் என்பதன் ஊடாக அரசாங்கம் கல்வி துறையில் தனக்கிருக்கும் பொறுப்பிலிருந்து விலகி கொள்கிறது.

இதன் காரணமாக இடைவெட்டப்படும் நிதி குறையை சுமக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தனியார்கள் கல்வியை வழங்குவதை அனுமதிப்பதால் கல்வி அனைவருக்கமான உரிமை என்ற நிலையிலிருந்து அது பணம் படைத்தவர்களுக்கான வரபிரசாதமாக மாறும்.

இந்த நிலையில் போட்டி மிக்க சூழலில் சாதரான பாட்டாளி வர்க்கத்தை சேர்ந்த மாணவர்கள் முதல் சுற்றிலே தோல்வியடைந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்படும்.

கல்வி துறையில் குளறுபடிகளை வேண்டுமென்றே தோற்றுவித்து மக்கள் மத்தயில் இலவச கல்வியின் மீது அதிருப்பதியையும் நம்பிக்கையீனத்தையும் தோற்றுவிப்பதுடன் தனியார் கல்வியை நோக்கி கவர்ந்திழுக்கும் கைங்கரியமும் திட்டமிட்டு செயற்படுத்தப்படுகின்றன.(2011 உயர்தர பரீட்சை Z-வெட்டுப்புள்ளி பிரச்சனை,2012 உயர்தர பரீட்சை வினாத்தாள் குளறுபடி.....)

ஆகவே இந்த தனியார் மயமாக்கள் பிரச்சனைக்கு எதிராக தற்காலிகமான தீர்வுகளை நாடாது அவற்றிற்கு எதிரான போராட்டங்களினூடாக பிழையான ஏகாதிபத்தியத்திற்கு முட்டு கொடுக்கும் பொருளாதார கொள்கையின் பங்களிப்பை தெளிவுபடுத்தி அந்த கொள்கையை மாற்றி புதிய முறையை,பொருளாதார கொள்கையை ஏற்படுத்துவதற்கான போராட்டத்திற்கு மக்க்களை அணிதிரட்ட வேண்டும்

### புற்றுநோயும் காரணங்களும் சிகிச்சை முறைகளும்

(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )

1. புற்றுநோய், அது உருவாகும் விதம் பற்றிய அறிமுகம்.
2. Common Cancer and Risk Factors.
3. புற்றுநோய் அறிகுறிகளும் பரவும் வழிமுறைகளும்.
4. பிரதான நவீன சிகிச்சை முறைகளும் அவற்றின் பக்கவிளைவுகளும்.
5. புற்றுநோய்த் தடுப்பு.

## கூடங்குளம் அணு உலைக்கெதிரான போராட்டம் தொடர்பான சில வரலாற்றுத் தகவல்கள்

1974 இல் பொக்ரான் அணுவெடிப்புச் சோதனையை இந்தியா செய்கிறது. இதைத்தொடர்ந்து அமெரிக்கா, தாராப்பூர் அணு மின் நிலையத்துக்கான எரிபொருள் வழங்கலை நிறுத்துகிறது. இதனால் சோவியத் யூனியனுடன் அணு சக்தி தொடர்பாக இந்தியா பேச்சுவார்த்தை நடத்துகிறது.

1988 இல் சோவியத் ஜனாதிபதி கோர்பச்சேவ் உடன் இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி கூடங்குளம் அணு மின் நிலையத்துக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறார். இதனைத்தொடர்ந்து கூடங்குளம் அணு மின் நிலையத்துக்கான எதிர்ப்பலைகள் தொடங்குகின்றன.

1989 மே மாதம் ஏறத்தாழ 10,000 பேர் வரை "தேசிய மீன்பிடித் தொழிலாளர் சங்கம்" எனும் பதாகையின் கீழ் திரண்டு கூடங்குளம் அணு உலைக்கெதிராகப் போராடுகிறார்கள். இப்போராட்டத்தின்போது காவல்துறை துப்பாக்கிச்சூடும் நடத்தியிருந்தது. இதன்பின் சோவியத் யூனியனின் சிதைவு, ரஜீகாந்தி கொலை ஆகிய சம்பவங்களால் கூடங்குளம் அணு மின் நிலையப் பணிகள் கிடப்பில் போடப்பட்டது.

1991 இல் 500 MW மின்வலுவினை உற்பத்தி செய்யும் உலைகளை அவ்விடத்தில் அமைக்க அரச அனுமதி கேட்டு Nuclear Power Corporation (NPC) விண்ணப்பிக்கிறது. இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

1997 மார்ச் மாதம், இந்தியப் பிரதமர் தேவ கௌடாவும் ரஷ்ய ஜனாதிபதி யெல்ட்ஸ்சினும் 1988 ஒப்பந்தத்திற்கு பிற்சேர்க்கைகள் சிலவற்றைச் சேர்த்துக் கையெழுத்திடுகிறார்கள். இதனைத்தொடர்ந்து கூடங்குளம் அணு மின் நிலையம் தொடர்பான விளக்கமான திட்ட அறிக்கை தயாராகிறது.

தொடக்கத்தில் ஏக்கருக்கு 2000 ரூபா என்ற அடிப்படையில் மக்களிடமிருந்து பயிர்செய் நிலங்கள் அணுமின் நிலையத்துக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. நிலங்கள் கொடுத்த மக்களுக்கு வேலைவாய்ப்பு, தொழில் ஒப்பந்தங்கள் போன்றவற்றைப் பெற்றுத்தருவதாக உறுதியளிக்கப்பட்டது. அத்தோடு உலைகளைக் குளிர்விப்பதற்காக பேய்ச்சிப்பாறை ஏரியிலிருந்து அல்லாமல் கடலிலிருந்தே நீர் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டது.

2001: வழங்கப்பட்ட உறுதிமொழிகள் எல்லாம் மீறப்பட்ட நிலையில் நிலங்களை இழந்த மக்கள் "அணு சக்திக்கெதிரான மக்கள் இயக்கம்" என்ற அமைப்பின் கீழ் திரண்டு எதிர்க்க ஆரம்பிக்கிறார்கள். திட்டமிடப்பட்டது இரண்டு அணு உலைகளாக இருக்க, மேலும் நான்கு அணு உலைகளை அமைக்கும் திட்டம் இருப்பதைக்கண்ட மக்கள் போராட்டத்தை தீவிரப்படுத்தினார்கள்.

சூழலியல் தொடர்பான ஆய்வு, அனுமதி போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதில் வெளிப்படைத்தன்மை இல்லாமலும் சந்தேகத்துக்கிடமான வகையிலும் செயற்பாடுகள் இருக்கக்கண்ட மக்கள் அதற்கும் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். இதற்கான பொது விசாரணைக்கு 2006 ஒக்டோபர் 6ம் நாள் குறிக்கப்பட்டது. இவ்விசாரணைக்கான அறிவித்தல் வழங்கப்பட்ட விதத்துக்கு எதிராக மக்கள் எதிர்ப்பினை வெளியிட்டதால் விசாரணை காலவரையறை இன்றி ஒத்திப்போடப்பட்டது.

பல்வேறு இழுபறிகளுக்கும் பிறகு 2007ம் ஆண்டு ஜூன் 2ம் நாள் பொது விசாரணை இடம்பெற்றது. இதற்கு 7000 பேர்வரையில் மக்கள் திரண்டு வந்திருந்தனர். கலகத்தடுப்பு ஆயுதத்துடன் 1200 காவற்துறை வீரர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். விசாரணை நடத்தப்பட்ட விதம், அறிக்கைகள் தமிழில் இல்லாமலிருப்பது, மாவட்ட கலெக்டரின் எதேச்சாதிகரமான நடவடிக்கைகள் மக்களது தீவிர எதிர்ப்புக்குள்ளாகின.

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
CC BY NC SA